புகழ்பெற்ற இலண்டன் ராயல் சொசைட்டியின் உறுப்பினராக அறிவிப்பு!

# சவுமியா சுவாமிநாதனின் அறிவுத் திறனுக்கான உயர் அங்கீகாரம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, மே 22-**

**புகழ்பெற்ற இலண்டன் இராயல் சொசைட்டியின் உறுப்பினராக அறிவிக்கப்பட்டுள்ள திருமிகு சவுமியா சுவாமிநாதனின் அறிவுத்திறனுக்கான உயர் அங்கீகாரம் எனவும், இது ஒட்டு மொத்த இந்தியாவுக்கான பெருமை என்றும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**



இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

திருமிகு சவுமியா சுவாமிநாதன் அவர்கள் புகழ்பெற்ற இலண்டன் இராயல் சொசைட்டியின் உறுப்பினராக அறிவிக்கப்பட்டிருப்பது ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான பெருமை, நம் அறிவுத்திறத்துக்கான உயர் அங்கீகாரம்!

இந்தியாவில் இருந்து இந்தப் பெருமையைப் பெறும் இரண்டாவது பெண்மணி இவர்தான் என்ற வகையில் புதிய வரலாற்றைப் படைத்து, மேலும் பல பெண்கள் தடைகளைத் தகர்த்தெறிந்து வெற்றிபெற திருமிகு @DoctorSoumya அவர்களின் சாதனை ஊக்கமளிக்கும்.

திராவிட மாடல் அரசின் காலை உணவுத் திட்ட விரிவாக்க நிகழ்ச்சியில் பங்கேற்று, நமது திட்டங்களைப் பாராட்டிப் பேசி, ஆலோசனைகளையும் வழங்கி வந்த திருமிகு சவுமியா அவர்களுக்குக் கிடைத்துள்ள இந்த அங்கீகாரம் தனிப்பட்ட முறையிலும் மகிழ்ச்சியளிக்கிறது.

அவரது தந்தை மரியாதைக்குரிய திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் அடிச்சுவட்டில் செயற்கரிய சாதனைகளைப் படைத்து வரும் திருமிகு. சவுமியா சுவாமிநாதன் அவர்கள் தொடர்ந்து தமது அறிவுக் கொடையை நம் மக்களின் முன்னேற்றத்துக்காக வழங்கிடுவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள

# அனைத்து மாணவ - மாணவிகளுக்குப் பாராட்டுகள்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மே 22-

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றி பெற்றுள்ள அத்தனை தம்பி - தங்கைகளுக்கும் என்னோட பாராட்டுகளைத் தெரிவிச்சுக்குகிறேன்.**

**Exam-ல Pass-ஆக முடியாத Students கவலைப்படாதீங்க. அடுத்தடுத்த வாய்ப்புகள் இருக்கு. மீண்டும் முயற்சி பண்ணா வெற்றி பெறலாம். விட்டதை பிடிக்கலாம்.**

**எல்லாத்தையும் விட இந்த வயசுல education தான் முக்கியம். அதை விட்டுறாம தொடர்ந்து முன்னேறுங்க.**

**உயர்கல்வியிலயும் - வாழ்க்கையிலயும் சாதிக்க என் அன்பும் - வாழ்த்தும்.**

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

---

பிரகடனப்படுத்துவோம்!

# தமிழ்நாட்டில் மும்மொழித் திட்டத்திற்கு இடமில்லை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, மே 22-*

*மும்மொழித் திட்டத்திற்கு தமிழ்நாட்டில் இடமே இல்லை என்பதை பிரகடனப்படுத்துவோம் என திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*



*அவரது அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாடு அரசின் முக்கிய கொள்கை முடிவாக சட்டமன்றத்தில் மூன்று முக்கிய கொள்கை திட்ட மாற்றங்களை அன்றைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றினார்.*

*1. 'சுயமரியாதைத் திருமணங்கள்' சட்டப்பூர்வமாகச் செல்லும் - முன்பு நடந்தவை உட்பட என்ற சட்டத் திருத்தம்.*

*2. சென்னை மாநிலம் (Madras State) என்ற பெயரை மாற்றி 'தமிழ் நாடு' என்று அழைத்தல்.*

*3. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளே பள்ளிகளில் கற்பிக்கப்படும் மொழிகள். ஹிந்தித் திணிப்புக்கு என்றும் இடந்தராமை என்பதை வலியுறுத்தி 'தமிழ் வாழ்க' என்று மூன்று முறை சட்டமன்ற உறுப்பினர்கள் முழக்கத்தோடு நிறைவேற்றப்பட்டது!*

*பிறகு தி.மு.க. ஆட்சி மாறி அ.தி.மு.க. ஆட்சி வந்தபோதும் இதே இரு மொழிக் கொள்கைதான் நடைமுறையிலிருந்தது.*

*இடையில் இரண்டு, மூன்று முறை (டில்லி) குடியரசுத் தலைவர் ஆட்சி, ஆளுநர் ஆட்சிகள் வந்த நிலையிலும் கூட, இந்த நிலைப்பாடு தான் தொடர்ந்ததே தவிர, 'மும்மொழித் திட்டம்' என்ற சாக்கில் ஹிந்தி, பிறகு சமஸ்கிருதம் என்ற ஆரிய மொழி கலாச்சாரத் திணிப்புக்கு இடந்தராத நிலைதான் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேல் - 58 ஆண்டுகளாக - தொடர்ந்து வருகிறது.*

*இதனை எப்படியாவது மாற்றி ஹிந்தியை (மறைமுகமாகவாவது) தமிழ்நாட்டில் இளம் பிள்ளைகளுக்குத் திணிக்க வேண்டும் என்பதற்கு நாளும் முயற்சி செய்து 'சி.பி.எஸ்.இ.' என்ற ஒன்றிய கல்வி அமைச்சகம் நடத்தும் பள்ளிகளில் ஆர்.எஸ்.எஸ். கொடுங்கரம் நீளுகிறது.*

*தமிழ்நாடு அரசுப் பள்ளிகளிலும் அதைச் செய்ய 'பி.எம்.சிறீ திட்டத்தை ஏற்றால்தான் 'சமக்ர சிக்ஷா' என்ற கல்வித் திட்டத்துக்குத் தர வேண்டிய நிதியை (2333 கோடி ரூபாய்) "மும்மொழித் திட்டத்தை ஏற்றால்தான் தான் தருவோம்" என்று அடாவடி அரசியல் நிலைப்பாட்டாக ஒன்றிய அரசின் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் என்பவர் அதிகார ஆணவச் செருக்குடன் கூறிய நிலையில், முந்தைய 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பத்தாயிரம் கோடி ரூபாயை தருகிறேன் என்று ஆசை காட்டி அழைத்தாலும், ஒருபோதும் இந்தித் திணிப்புக்கான மும்மொழித் திட்டத்தை எங்களது அரசு ஏற்கவே ஏற்காது" என்று உறுதியான நிலைப் பாட்டை எடுத்தார்.*

*புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களது ஆட்சியின் நிலைப்பாட்டைப் பற்றி அவர் திட்டவட்டமாக அறிவிப்பது முக்கியம்.*

*புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாடு பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் முதல் செய்தியாளர்கள் சந்திப்பில், "இரு மொழிக் கொள்கை அதாவது, 'அவரவரின் தாய் மொழி' மற்றும் 'உலகத்துடன் உறவாட ஆங்கிலம்' என்பதுதான் த.வெ.க.வின் கொள்கை." என்றார் - அதை வரவேற்கிறோம்.*

*ஆனால், "சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் பி.எம்.சிறீ. திட்டம் குறித்து அடுத்தடுத்து விவாதித்து முடிவு எடுப்போம்" என்று கூறியிருப்பதில் கொள்கைத் தெளிவற்ற தொனி தெரிகிறது! அதுபற்றி திட்டவட்டமாக அறிவிப்பது அவசர அவசியம்.*

*'முதலில் ஒரு சிறு ஓட்டையைப் போட அனுமதித்து விட்டால், பிறகு நாளா வட்டத்தில் ஒரு யானையையே நுழைய விடும் அளவுக்கு அதைப் பெரிதாக்க ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசு தயாராக இருக்கிறது' என்பதை உணர்ந்து, விரைந்து தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.*

*'இந்தி, சமஸ்கிருதத்திற்கு எதிரான மொழிப் போர்' என்பது நூறாண்டு வரலாறு கொண்டது என்பதை மறந்து விடக் கூடாது.*

*1926இல் தான் முதன் முதலில் 'இந்தியின் ரகசியம்' என்ற அறிக்கைமூலம் 'குடிஅரசு' ஏட்டில் தந்தை பெரியார் 'முதல் எச்சரிக்கை மணி'யை அடித்து தமிழ்நாட்டை எழுப்பினார் என்ற வரலாறு அறிய வேண்டிய முக்கிய வரலாறு ஆகும். 1937-1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குக்கூட அக்கட்டுரையே முன்னோட்டமாகும் என்பதை இன்றைய இளையோர் அறிந்து கொள்ளுதல் முக்கியமாகும்!*

*பல மொழிகளைத் தாமே விரும்பிக் கற்பது வேறு; வலுக்கட்டாயமாக ஒரு மொழியை ஆதிக்கச் சின்னமாக திணிப்பது வேறு - சரியான புரிதல் தேவை.*

*இவ்வாறு கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

---

விழுப்புரம் மாவட்டம் - ஒலக்கூர் அருகே

# சரக்கு ரயில் தடம் புரண்டு விபத்து!

## சென்னையை நோக்கி வந்த ரயில்கள் தாமதம்!

சென்னை, மே 22-

விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் அருகே சரக்கு ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

அதனால் சென்னையில் இருந்து திருச்சி, மதுரை, நெல்லை, கன்னியாகுமரி செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில்கள், வந்தே பாரத் ரயில்கள் ஆங்காங்கே நடுவழியில் நிறுத்தப்பட்டன.

தென் மாவட்டங்களில் இருந்து சென்னையை நோக்கி வந்த ரயில்களும் ஆங்காங்கே நடுவழியில் நிறுத்தப்பட்டதால் பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

ரயில்வே உயர் அதிகாரிகள், பொறியாளர்கள் மற்றும் மீட்புக் குழுவினர் விரைந்து மீட்புநடவடிக்கைகள் எடுத்தனர்.

---

# டெட்ரா பேக்கில் மது விற்பனை : உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்!

*புதுடெல்லி, மே 22-*

*டெட்ரா பேக், பிஇடி பாட்டில்கள் மற்றும் சிறு பொட்டலங்கள் போன்ற சிறிய பேக்கிங்கில் மதுபானம் விற்பனை செய்யப்படுவதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவை விசாரித்த உச்சநீதி மன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.*

*உரிய எச்சரிக்கை இல்லாமல் சாதாரண பழச்சாறு பொருட்களைப் போல ஏமாற்றும் வகையில் தோற்றமளிப்பதாகவும், இதனால் 18 வயதுக்குட்பட்டோர் மது அருந்துதல், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல் மற்றும் பொது இடங்களில் மது அருந்துதல் போன்ற சம்பவங்கள் அதிகரிப்பதாக மதுபோதையில் வாகனம் ஓட்டுவதற்கு எதிரான அமைப்பு (Community against Drunken Driving) குற்றம் சாட்டி இருந்தது .*

*CADD சார்பாக ஆஜரான வழக்கறிஞர் விபின் நாயர், புகையிலைப் பொருட்களைப் போலில்லாமல் , இது போன்ற பொட்டலங்களில் விற்கப்படும் மதுபானங்களில் முக்கிய எச்சரிக்கைகள் இடம்பெறுவதில்லை என்று நீதிமன்றத்தில் வாதிட்டார் . இதனையடுத்து இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜாய்மால்ய பக்ஷி மற்றும் நீதிபதி விபுல் பன்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு, மத்திய அரசுக்கும் பல்வேறு மாநில அரசுகளின் கலால் துறைகளுக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.*

*பூங்காக்கள், திரையரங்குகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் நகரும் வாகனங்கள் போன்ற பொது இடங்களில் மதுபானங்களை மறைத்து வைத்து அருந்துவதை எளிதாக்கும் வகையில், அன்றாட பானப் பொருட்களைப் போன்ற கையடக்கப் பொட்டலங்களில் இவை அதிகளவில் விற்கப்படுகின்றன. பொட்டலங்களில் பழங்களின் படங்களைக் கொண்டு, "பண்டி பிரீமியம் வோட்கா," "செல்லி மாங்கோ வோட்கா," மற்றும் "பிரீமியம் ரோமனோவ் வோட்கா - ஆப்பிள் த்ரில்" போன்ற பெயர்களில் சந்தைப்படுத்தபடுகிறது என்று மனுதாரர் மனுவில் புகார் தெரிவித்திருந்தார்.*

---

க.சுந்தர் தலைமை! டி.மோகன்தாஸ் வரவேற்புரை! இடைக்கழிநாடு பேரூராட்சி மன்ற உறுப்பினர்

# பொறியாளர் பெ.பிரபு (எ) ஜெயலட்சுமணன் இல்ல விழா!

### க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன், பனையூர் மு.பாபு, ஆர்.டி. அரசு, ப.அப்துல்மாலிக், ச.இனியரசு, வாழ்த்துரை!

*காஞ்சிபுரம், மே 22-*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க. சுந்தர் தலைமையில் டி.மோகன்தாஸ் வரவேற்புரையில் நடைபெற்ற இடைக்கழி நாடு பேரூராட்சி மன்ற உறுப்பினர் பொறியாளர் பெ.பிரபு (எ) ஜெயலட்சுமணன் இல்ல விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சி.வி.எம்.பி. எழிலரசன், பனையூர் மு.பாபு, மருத்துவர் ஆர்.டி. அரசு, ப.அப்துல் மாலிக், ச. இனியரசு , சங்கர், சு.க. ஆதவன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.*

*இவ்விழாவில் மாவட்டக் கவுன்சிலர் சு. சக்திவேல், எம். அருணா , ஆர். ரஞ்சித்குமார், சாந்தி முருகேசன், ஆர். சசிகுமார் மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.பக்தவச்சலம், பக்ருதீன் அலி அகமது, ஒன்றியப் பிரதிநிதிகள் கே. எஸ். ஜெயராமன், ஜி.வி.பெருமாள், இரஞ்சன் (எ) வஜ்ஜிரவேலு, தட்சணாமூர்த்தி,*

*ஒன்றியச் செயலாளர்கள் வி. ஏழுமலை, எ.சிற்றரசு, எ சரவணன், ரவீந்திரநாத், பாரத், மு.குணசேகரன், கே. நாகராஜ், ஆர்.தசரதன், ஜெ சங்கர் செம்பருத்தி துர்கேஷ், செல்வி சம்யுக்தா ஐயனார், செங்காட்டூர் தலைவர் ஆர்த்தி செல்வகுமார், இ. வெங்கடேசன், முனுசாமி, சி.தயாளன் என். இராஜ்குமார், பெ.பாக்கியராஜ், பா. கோட்டேஷ்வரி, இளைய ராஜா, புவனேஸ்வரி வேலு, சங்கர், பத்மநாபன்,*

*ஏ. மணிவண்ணன், எம். நாகூர்மீரான், இளவரசி சரவணன், பரமேஸ்வரி சங்கரலிங்கம், சுசீலா ஆறுமுகம், புவனேஸ்வரி முருகதாசன், என். தமிழரசன், விசாலாட்சி லோகு, மோனிஷா சகாதேவன், கே.அருண் பாபு, வஜனா பாஸ்கரன், சாந்தி ரவிக்குமார், ஜெயலட்சுமி, மகேந்திரன், காலாவதி நாகமுத்து, பிரேமா சங்கர், சித்ரா ராஜேந்திரன்,*

*செ.ஏழுமலை, பி.வி. புருஷோத்தமன், பெ.மணி, கா.பால்ராஜ், வல்லரசு செங்குட்டுவன், யுவராஜ், டி.சாமிநாதன் சந்திரன், யுவராஜ், பி.தேசமுத்து, எஸ்.பாலசுந்தரம், பி.திருமலை, சிபி ரவிக்குமார், கலைச்செல்விஜெகநாதன், செய்யூர் மு.தணிகாசலம், சதீஷ்குமார், கே. நாகராஜ், இரா. ராமமூர்த்தி, மு.கண்ணகி, கே. பூபாலன், மு.வசந்த்ராஜ்,*

*டி. வரதராஜன், ஏ.முரளி, கா.நிர்மல்குமார், ராமனைய்யா, செ.ஐயப்பன், கி.குமரேசன், டி.பூலோகம் ஏ. சுந்தரமூர்த்தி, அ.விஜயன் சாந்தி, ரவிக்குமார், இனியமதிகண்ணன், மு. கண்ணன், சங்கர், மு.குணசேகரன், டி. நாகப்பன், ஆர்.ஜானகி, ஜீவ பூலோகம், பாரதிகாண்டீபன், தீபாமுனுசாமி, இ. சீமாத்தான், பி.லோகநாதன்,*

*கே.எஸ்.ஆதிகேசவலு, ஆ.கோ. பாண்டுரங்கன், வெடால் மு. ராமலிங்கம், கா.மு. தனசேகரன், கு. விஷ்ணுவரதன், காஜாமொய்தீன், விநாயக மூர்த்தி, முருக தாசன், எஸ். சரவணன், மெடிக்கல் இரவி, டி. சங்கரலிங்கம் கே அன்னப்பன், சக்திவேல், பி.பாலகிருஷ்ணன், முனுசாமி, கஜேந்திரன், ஆறுமுகம், தேவா, டி.செங்கேணி, டி.கண்ணப்பன், அ.மணிவண்ணன், நாகூரான், பி. ராஜமுத்து, ஜி.காத்தவராயன், பி.பஷீர், ஏ.தனசேகர், நீலகண்டன், கச்சிமொய்தீன், பி.திருமலை, கே. இராஜகோபால், வி.முத்துவேல், கே. முருகன், எஸ். கருணாகரன், இ. ராமலிங்கம், கே. சுந்தர் ராஜ், பி. இராமச்சந்திரன், சண்முகம்,*

*முகமது ரிப்பாய், அருள் நிதி, கே. ஐ. அப்துல்ரஹ்மான், செந்தில்குமார், திராவிட திவாகரன் சி.சக்திவேல், சோழராஜன், கலைச்செல்வம், ஜே. பாரதி, கே.அருண், எச்.ரமணன், எஸ். வினோத்குமார், உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.*

*நிறைவாக எஸ்.பாஸ்கரன் நன்றியுரை வழங்கினார்.*

---

பெங்களூரு - சுவிட்சர்லாந்து இடையே

# அக்டோபர் மாதம் முதல் நேரடி விமான சேவை!

பெங்களூரு, மே 22-

பெங்களூருவில் இருந்து சுவிட்சர்லாந்திற்கு வரும் அக்டோபர் முதல் புதிய நேரடி விமான சேவை தொடங்கப்பட உள்ளது. பெங்களூரு அருகே தேவனஹள்ளியில் உள்ள கெம்பேகவுடா (Kempegowda) சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஏராளமான நாடுகளுக்கு நேரடி விமான சேவை உள்ளது.

இருப்பினும் சுவிட்சர்லாந்து உள்ளிட்ட சில நாடுகளுக்கு இதுவரை நேரடி விமான சேவை இல்லை. இணைப்பு விமான சேவைதான் இருந்து வருகிறது. பெங்களூருவில் இருந்து சுவிட்சர்லாந்துக்கு நேரடி விமானம் இயக்கப்பட வேண்டும் என்று பயணிகள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் பெங்களூருவில் இருந்து சுவிட்சர்லாந்துக்கு நேரடி விமான சேவை தொடங்கப்பட உள்ளது.

இந்த விமான சேவை வருகிற அக்டோபர் மாதம் முதல் துவங்க இருக்கிறது. இதன்மூலம் பெங்களூரு சுவிட்சர்லாந்து இடையேயான தொழில் வர்த்தகம், தகவல் தொழில்நுட்ப துறை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.




இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி வாலாஜா கிழக்கு ஒன்றிய பகுதிகளில் உள்ள வாக்காளப் பெருமக்களுக்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடம் முன்னாள் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி நன்றி தெரிவித்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம் ஒன்றிய செயலாளர் எம்.சண்முகம் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.



திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, நல்லூர் தெற்கு, வெண்கருப்பூர் ஊராட்சியில் வாக்காளப் பெருமக்களுக்கு திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர், கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் சி.வி.கணேசன் நன்றி தெரிவித்தார்.